**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– சேவா நிலையம் சொசைட்டி ஆண்டிப்பட்டி என்ற தொண்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அனுமதியினை இரத்து செய்து ரமணா மருத்துவ அறக்கட்டளை நிறுவனத்திற்கு அனுமதி வழங்கி– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1D) எண். 54

நாள்: 27–07–2017
ஹேவிளம்பி, ஆடி 11,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்க:-

1. அரசாணை(நிலை) எண்.56, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள்08–12–2015.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் ந.க.எண்.2943/மா.தி.ந.2.1/2015, நாள் 06.07.2016.

-------------

**<u>ஆணை:</u>**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தேனி மாவட்டத்தில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக செயல்பட்டு வரும் சர்வோதீப் நிறுவனம், பெரியகுளம், சேவா நிலையம், ஆண்டிப்பட்டி மற்றும் இமேஜ் பொதுநல அறக்கட்டளை சின்னமனூர் ஆகிய மூன்று பகல் நேர காப்பகங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தினை, 2015–2016 ஆம் நிதியாண்டில் தொடர திட்டத் தொடராணையும், மற்றும் ஒரு மையத்திற்கு ரூ.3,88,000/– வீதம் மூன்று பகல் நேர காப்பகங்களுக்கு மொத்தம் ரூ.11,64,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கருத்துருவில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், தேனி மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் தமது அறிக்கையில் தேனி மாவட்டத்தில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக பகுதி–II திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் மூன்று பகல் நேர காப்பகங்களில், சேவாநிலையம் சொசைட்டி, ஆண்டிபட்டி மூலம் செயல்பட்டு வந்த பகல் நேர காப்பகம், நிர்வாக காரணங்களை முன்னிட்டு அம்மையத்தினை 01.01.2016 முதல் தொடர்ந்து நடத்திட இயலாது என சம்பந்தப்பட்ட தொண்டு நிறுவன நிர்வாகியால் தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில், அத்தொண்டு நிறுவனம் 31.03.2015 அன்று இத்திட்டத்திலிருந்து தேனி மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலரால் விடுவிக்கப்பட்டது எனவும், தேனி மாவட்டத்தில் ரமணா மருத்துவ அறக்கட்டளை, ஆண்டிபட்டி எனும் நிறுவனம் மனவளர்ச்சி குறையுடையோருக்கான பகல் நேர பராமரிப்பு மையம் 01.01.2016 முதல் செயல்பட்டு வருகிறது என்றும், இம்மையத்தில் சராசரியாக 20 மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் மேலும், இப்பகல் நேர பராமரிப்பு மையத்திற்கு வருகை தரும்

மனவளர்ச்சி குறையுடைய குழந்தைகளுக்கு இலவச சிகிச்சை மற்றும் தசைப் பயிற்சிகள் முதலான மறுவாழ்வு உதவிகள் வழங்கப்படுவதாகவும் 1 சிறப்பாசிரியர், 1 தசைப் பயிற்சியாளர் மற்றும் 2 உதவியாளர்கள் பணிபுரிந்து வருவதாகவும், மேலும், இந்நிறுவனம் 25.04.2016 முதல் 18.02.2019 வரையிலான காலத்திற்கு ஊமுற்றோர் நலச் சட்டம் 1995 பிரிவு 52ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நிறுவனத்தால் பகல் நேர பராமரிப்பு மையம் 01.04.2016 முதல் 31.03.2017 வரையிலான காலத்தில் செயல்பட்டுள்ளதோடு மட்டுமின்றி 2017–18 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது என்பதால், தேனி மாவட்டத்தில் மூன்று பகல் நேர பராமரிப்பு மையங்களுக்கு நிதியுதவி வழங்கிடும் திட்டத்தின் கீழ் 2015–16 ஆம் நிதியாண்டில் செயல்பட்டுவந்த சேவா நிலையம், ஆண்டிபட்டி என்ற நிறுவனத்திற்கு பதிலாக ரமணா மருத்துவ அறக்கட்டளை ஆண்டிபட்டி நிறுவனம் மூலம் மனவளர்ச்சி குறையுடையோருக்கான பகல் நேர பராமரிப்பு மையத்தினை தேனி மாவட்ட ஆட்சியர் பரிந்துரையின் அடிப்படையில், 01.01.2016 ஆம் நிதியாண்டு முதல் தொடர்ந்து நடத்திடுவதற்கான அனுமதி ஆணையும் மற்றும் 2016–17 ஆம் நிதியாண்டிற்கு நிதி ஒதுக்கீடு பின்வருமாறு வழங்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

| வ.எண். | | விவரம் | தொகை (ரூ.) | மொத்தம் (ரூ.) |
|---|---|---|---|---|
| அ. | பணியாளர் | | | ரூ.2,64,000/– |
| | 1. | சிறப்பு கல்வி பயிற்றுநர்/Occupational Therapist/Physio Therapist ரூ.10,000/– x 2 x 12 மாதம் | ரூ.2,40,000/– | |
| | 2. | Care giver/Nursing trained. ஆயா ரூ.1,000/– x 1 x 12 மாதம் | ரூ.12,000/– | |
| | 3. | துப்புரவுப் பணியாளர் ரூ.1,000/– x 1 x 12 மாதம் | ரூ.12,000/– | |
| ஆ. | இதர செலவினங்கள் | | | ரூ.1,24,000/– |
| | 1. | உணவு ரூ.10/– x 25 நாள் x 12 மாதங்கள் x 30 குழந்தைகள் | ரூ.90,000/– | |
| | 2. | மருந்துகள் | ரூ.3,000/– | |
| | 3. | எழுதுப் பொருள்கள் | ரூ.3,000/– | |
| | 4. | வாடகை | ரூ.24,000/– | |
| | 5. | நிர்வாகச் செலவு | ரூ.4,000/– | |
| மொத்தம் | | | | ரூ.3,88,000/– |

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, சேவா நிலையம் சொசைட்டி, ஆண்டிப்பட்டி என்ற தொண்டு நிறுவனத்தின் மூலம் செயல்பட்டு வந்த அன்னை டோரா மனவளர்ச்சிக் குன்றியோருக்கான பகல் நேர காப்பகம் நிர்வாக காரணங்களினால் செயல்பட இயலாது என அத்தொண்டு நிறுவனத்தால் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் அக்காப்பகத்திற்கு வழங்கப்பட்ட அனுமதியினை இரத்து செய்து தேனி மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்துள்ள ரமணா மருத்துவ அறக்கட்டளை நிறுவனத்தை 01.01.2017 முதல் செயல்படுத்திட அனுமதி வழங்கி கீழ்காணும் நிபந்தனைகளின்படி அரசின் நிதியுதவியுடன் செயல்படக்கூடிய தொண்டு நிறுவனமாக அங்கீகரித்து அரசு ஆணையிடுகிறது.

i. சேவா நிலையம் சொசைட்டி ஆண்டிப்பட்டி என்ற தொண்டு நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு வந்த பயனாளிகள்/ உள்ளுறைவாளர்கள் தொடர்ந்து பராமரிக்கப்படல் வேண்டும்.

ii. உள்ளுறைவாளர்களின் மொத்த எண்ணிக்கை 30க்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

iii. திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள பணியாளர்கள் கண்டிப்பாக நியமனம் செய்திடல் வேண்டும்.

iv. மனவளர்ச்சி குன்றியோருக்கான பகல் நேர பராமரிப்பு மையம், ரமணா மருத்துவ கட்டளை, பிச்சம்பட்டி (அஞ்சல்), ஆண்டிப்பட்டி எனும் முகவரியில் இயங்கி வருதல் வேண்டும்.

4. மேலும், இத்தொண்டு நிறுவனம் சரியாக செயல்படாதபட்சத்தில் நீக்கும் பொழுது அரசின் ஒப்புதலைப் பெற வேண்டும் என மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் (மு.கூ.பொ.), சென்னை–5.
தேனி மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மாவட்டம்.
தேனி மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.

**நகல்:–**
மாண்புமிகு அமைச்சர்( சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் முதன்மை தனிச் செயலாளர்,சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.